[25th March 1964

Fourth Five-Year Plan

* 404 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state the details regarding the constitution of working groups for the different departments of the Government for making tentative proposals for the Fourth Five-Year Plan?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Copies of orders[a] issued by the Government constituting working groups are placed on the Table of the House.

திரு. இரா. நெடுஞ்செழியன் : முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே விவசாயம், மின்சாரம், தொழில் வளர்ச்சி இவற்றிக்கு முக்கியத்துவம் தந்ததுபோல, நாலாவது ஐந்தாண்டு திட்டம் எந்தக் குறிக்கோளை முக்கியமாக வைத்துக்கொண்டு நிறுவப்பட்டு இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது அதைப்பற்றி விவரமாக சொல்லுவதற்கில்லை. ஒவ்வொரு இலாகாவினுலும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. நாலாவது ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்கும்பொழுது எதை அடிப்படையான லட்சியமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி குறிப்பிட முடியும்.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, in the statement placed on the Table of the House, it is stated that Secretaries of Departments will be the Chairmen of the working groups. Will the Government consider the desirability of appointing some non-officials as Chairmen of the working groups?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, the Government do not think it necessary to associate non-officials at this stage. This is only a study group.

திரு. வை. சங்கரன் : போன ஐந்தாண்டு திட்டக்காலத்திலே, 1960-ல் என்று நினைக்கிறேன், ஆலோசனை சொல்லுவதற்கு ஒரு சில ஜில்லாக்களிலே உள்ள எம்.எல்.ஏ.-க்களை சேர்த்து ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அதுபோன்று இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் ஒரு குழு ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அப்படியானுல் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு எம்.எல்.ஏ.-க்கு பிரதிநிதித்துவம் அளிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த நிலைமை நான்காவது ஐந்தாண்டு திட்டத்தை பொறுத்தவரையில் இன்னும் வரவில்லை. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரிக்கும்பொழுது ஒரு சட்டமன்றக் குழுவை அமைத்து அவர்களுடைய யோசனையை கேட்டோம்.

(a) Printed as Appendix II on pages 111-131.

25th March 1964]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சட்டசபையிலே வைக்கப்பட்டிருக்கிற விவரப்படி, "**the draft plans should be got ready by the end of March** 1964" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு டிராப்ட் பிளான் தயாராகி விட்டதா? அப்படியானல் சபை முன்பு அதை வைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் 1964, மார்ச் என்று சொன்னேன். மார்ச் மாதம் இன்னும் முடியவில்லை. இந்த மாதம் முடிந்து அதற்குமேல் பரிசீலனை செய்யவேண்டும். சட்டமன்றக் குழுவை அமைக்கும்பொழுது இதை வைத்து அதற்குப் பிறகு விவாதிக்கலாம்.

Co-operative Spinning Mill, Coimbatore

* 405 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether a Co-operative Spinning Mill is proposed to be started for the benefit of the workers of textile mills in Coimbatore district; and

(b) if so, the present stage of the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன் : கைத்தறி நெசவாளரைக் கொண்ட ஒரு நூற்பு ஆலையை அமைக்கவும், அவர்களுக்கு வேண்டிய பங்குத் தொகையை அரசாங்கம் கடனகக் கொடுப்பதற்கும் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ராஜ்யத்தில் வைத்திருக்கிற 12 கூட்டுறவு மில்களும் கைத்தறி நெசவாளர்களால் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சங்கங்களிலிருந்து நிதி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. பணம் போதாது என்பதற்காக வெளியார் உதவி என்ற முறையில் சிலர் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கிறர்களே தவிர முழுவதும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் கைத்தறி நெசவாளர்களைக் கொண்டு நூற்புஆலை என்று சொல்லுகிறர்கள். கைத்தறி நெசவாளர்கள் என்று சொல்லுகிறர்களே தவிர, அதிலே மாஸ்டர் வீவர்கள்தான் இருக்கிறர்கள். உண்மையாகவே தொழில் செய்கின்ற கைத்தறி நெசவாளர்களைக்கொண்ட நூற்பு ஆலையை அமைத்து பங்குத் தொகையை அரசாங்கம் கடனகக் கொடுத்து துவக்குவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது பங்குத் தொகை கொடுப்பது எல்லாம், நூல் கூட்டுறவு சொசைட்டிகள் தான். தனி நபர்கள் கூட கொடுப்பதில்லை. சொசைட்டிகள் கொடுக்கிற காரணத்தால் அவர்கள்தான் அங்கத்தினர்கள் என்பது தெளிவாகிறது. மாஸ்டர் வீவர்களுக்கு கூட்டுறவு சங்கம் கொடுக்கவில்லை. அப்படி கொடுக்காததினல் கோபம் கூட இருக்கிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.